©
GOVERNMENT OF TAMIL NADU
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 8] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 21, 2018
Maasi 9, Hevilambi, Thiruvalluvar Aandu–2049

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

---

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

---

**CONTENTS**

| | Pages. |
|---|---|
| TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION | |
| Amendments to Fees and Fines Regulations, 2004.. .. .. | 58-62 |

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION.

**Amendments to Fees and Fines Regulations, 2004**

*(Notification No.TNERC/Regulations/F&F/4/2-9 dated 12-2-2018)*

No. VI(2)/27/2018.

In exercise of the powers conferred by clause (g) of sub-section (1) of Section 86 read with Section 181 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003) and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby makes the following amendments to the Tamil Nadu Electricity Regulatory Commission – Fees and Fines Regulations, 2004, the draft of the same having been previously published as required by sub-section (3) of Section 181 of the said Act.

AMENDMENTS

In the said Regulations, in regulation 6, in the Table,-

(1) after item No. 2 and the entries relating thereto, the following items and entries shall be inserted, namely:-

| | |
|---|---|
| "**2A** Approval for fees and charges collectable by SLDC from the generating companies and licensees engaged in Intra-State Transmission of electricity under Section 32(3) of the Electricity Act, 2003. | 0.02% of the revenue receipt in the preceding year"; |

(2) for item No. 3 and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely:-

| | |
|---|---|
| "**3** Review of order as in (1), (2) and (2A) above for a | |
| (a) Request by the original tariff petitioners themselves | 5% of the fees paid at the time of filing the original petition |
| (b) Request by an association / group/ organization registered under the Companies Act, 1956 (Act 1 of 1956) or any firm or other Corporate Body | Rs.15000 |
| (c) Request by an individual consumer | Rs.1000 |

".

(By order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

Chennai-600 008,
13th February 2018.

S. CHINNARAJALU,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

**EXPLANATORY STATEMENT**

Consequent to the separation of the functions of State Load Despatch Centre from the Transmission Licensee in the State of Tamil Nadu, the State Load Despatch Centre (SLDC) has started filing petitions on its own for approval of levy and collection of fees and charges from the Generating Companies and Licensees engaged in Intra-State Transmission of Electricity for meeting its operational needs. In view of the same, it has been decided by the Commission to collect fees from the SLDC in respect of such application/petition to be filed before the Commission by the State Load Despatch Centre (SLDC) from time to time as is being done by the Transmission and Distribution Licensees.

This amendment seeks to give effect to the above decision.

(By order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

Chennai-600 008,
13th February 2018.

S. CHINNARAJALU,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

**STATEMENT SHOWING THE EXISTING PROVISION AND THE PROVISION EMBODYING AMENDMENT**

**Tamil Nadu Electricity Regulatory Commission – Fees and Fines Regulations, 2004.**

| | Existing Provision | | | Provision embodying amendment | | |
|---|---|---|---|---|---|---|
| | (1) | | | (2) | | |
| 6 | Fees for Tariff Petitions including Power Purchase Agreements and Miscellaneous-<br><br>The fee structure for (a) determination of grid, bulk or retail tariff (b) transmission tariff and petitions on these tariff (c) Petitions / applications for approval of Power Purchase or procurement and (d) Miscellaneous is furnished in the Table below:- | | 6 | Fees for Tariff Petitions including Power Purchase Agreements and Miscellaneous-<br><br>The fee structure for (a) determination of grid, bulk or retail tariff (b) transmission tariff and petitions on these tariff (c) Petitions / applications for approval of Power Purchase or procurement and (d) Miscellaneous is furnished in the Table below:- | | |
| | Table | | | Table | | |
| | xxxx | | | xxxx | | |
| | | | | 2.A. Approval for fees and charges collectable by SLDC from the Generating Companies and Licensee engaged in Intra-State Transmission of electricity under Section 32(3) of the Electricity Act, 2003 | 0.02% of the relevant receipt in the preceding year. | |
| | 3. Review of orders as in1 and 2 above for a – | | | 3. Review of orders as in 1, 2 and 2A above for a – | | |
| | (a) Request by the original Tariff Petitioners themselves | 5% of the fees paid at the time of filing the original petition. | | (a) Request by the original Tariff Petitioners themselves | 5% of the fees paid at the time of filing the original petition. | |
| | (b) Request by an association/group/ organisation registered under the Companies Act, 1956 (Act 1 of 1956) or any firm or other Corporate Body | Rs.15000 | | (b) Request by an association / group / organisation registered under the Companies Act, 1956 (Act 1 of 1956) or any firm or other Corporate Body | Rs.15000 | |
| | (c) Request by an individual consumer | Rs.1000 | | (c) Request by an individual consumer | Rs.1000 | |

(By order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

Chennai-600 008,
13th February 2018.

S. CHINNARAJALU,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை

## 2004 ஆம் ஆண்டு கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறைவிதிகளுக்கான திருத்தங்கள்

**(அறிவிக்கை எண். தமிஒஆ/க & அ/4/ 2–9, நாள் 12–2–2018)**

**அறிவிக்கை**

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவுடன் சேர்த்து படிக்கப்படும் 86 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (எ) கூறின் படி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம் 2004 ஆம் ஆண்டு கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தங்களை செய்கிறது. இத்திருத்தத்தின் வரைவானது மேற்சொன்ன 181 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளில், 6 ஆம் ஒழுங்குமுறைவிதியில், அட்டவணையில்,–

(1) 2 ஆம் இனம் மற்றும் அதனுடன் தொடர்புள்ள பதிவுகளுக்குப் பின்னர், பின்வரும் இனங்கள் மற்றும் பதிவுகள் சேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | |
|---|---|
| “2A. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மின்உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மின் செலுத்துதலில் ஈடுபட்டுள்ள உரிமதாரர்களிடமிருந்து மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் வசூலிக்கக்கூடிய கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்கான ஒப்புதல். | முந்திய ஆண்டின் வருவாய் வரவினத்தில் 0.02 விழுக்காடு.”; |

(2) இனம் எண். 3 மற்றும் அதனுடன் தொடர்புள்ள பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் இனங்கள் மற்றும் பதிவுகள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

| | |
|---|---|
| “3. மேலே 1, 2 மற்றும் 2A இல் கூறப்பட்ட ஆணைக்கான மறு ஆய்வு | |
| (அ) முதலில் மனு செய்த மின்கட்டண மனுதாரர்களினாலேயே முறையீடு செய்யப்படும்போது | அசல் மனு தாக்கல் செய்யும்போது செலுத்தியுள்ள கட்டணத்தில் 5 விழுக்காடு. |
| (ஆ) 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் (சட்டம் 1/1956) இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கழகம்/குழு/அமைப்பு அல்லது ஏதாவது நிறுவனம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பினால் முறையீடு செய்யப்படும் போது | ரூ. 15000 |
| (இ) ஒரு தனிப்பட்ட நுகர்வோரின் முறையீடு | ரூ. 1000”. |

(தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 008,
2018 பிப்ரவரி 13.

**சு. சின்னராஜலு ,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்கவுரை**

தமிழ்நாட்டில் மின்செலுத்தல் உரிமதாரரின் செயல்பாடுகளிலிருந்து, மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் அலுவற்பணிகள் பிரிக்கப்பட்ட பின்னர், மாநில மின்சுமை பகுப்பு மையம் அதனுடைய இயக்கத் தேவைகளை நிறைவு செய்ய மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் மாநிலத்திற்குள் மின் செலுத்தலில் ஈடுபட்டுள்ள மின் செலுத்தல் உரிமதாரர்களிடமிருந்தும் கட்டணங்கள் மற்றும் செலவுகளை வசூல் செய்வதற்கான ஒப்புதல் கோரும் மனுக்களை தானாக தாக்கல் செய்யத் தொடங்கியுள்ளது. அதனை கருத்திற்கொண்டு மின்செலுத்தல் மற்றும் மின்பகிர்மான உரிமதாரர்களைப்போன்று மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் ஆணையத்தின் முன் அவ்வப்போது தாக்கல் செய்யப்படும் அத்தகைய மனு/விண்ணப்பத்திற்கும் ஆணயத்தால் கட்டணங்கள் வசூல் செய்வது அவசியம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த திருத்தம் மேற்சொன்ன முடிவினை செயற்படுத்துவதற்கு முற்படும்.

(தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 008,
2018 பிப்ரவரி 13.

**சு. சின்னராஜலு ,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**இருந்துவரும் வகைமுறை மற்றும் திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறையினைக் காட்டும் பட்டியல்**

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – 2004 ஆம் ஆண்டு கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறைவிதிகள்**

| *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **6.** மின்சக்தி வழங்குகை ஒப்பந்தம் மற்றும் பல் வகைகள் உள்ளிட்ட மின்கட்டண மனுக்களுக்கான கட்டணங்கள்<br><br>கீழே கண்டவற்றிற்கு கட்டண அமைப்புமுறை இப்பிரிவின்படி வகை செய்யப்படுகிறது.<br><br>(அ) மின்கட்டமைப்பு பெருமளவு அல்லது சில்லறை மின்கட்டணவீதம் ஆகியவற்றிற்கு மின்கட்டணங்களைத் தீர்மானித்தல்<br><br>(ஆ) மின்செலுத்துகை மின்கட்டணம் மற்றும் அத்தகைய மின்கட்டணங்களின் மீது தாக்கல் செய்யப்படும் மனுக்கள்.<br><br>(இ) மின்சக்தி வாங்கும் அல்லது கொள்முதல் செய்முறைக்கான ஒப்புதலுக்கான மனுக்கள் / விண்ணப்பங்கள்<br><br>(ஈ) பல்வகைகள் | **6.** மின்கொள்முதல் உடன்படிக்கைகள் மற்றும் பல்வகைகள், உள்ளிட்ட மின்கட்டண மனுக்களுக்கான கட்டணங்கள்:–<br><br>கீழே கண்டவற்றிற்கு கட்டண அமைப்புமுறை இப்பிரிவின்படி வகை செய்யப்படுகிறது.<br><br>(அ) மின்கட்டமைப்பு பெருமளவு அல்லது சில்லறை மின்கட்டணவீதம் ஆகியவற்றிற்கு கட்டணங்களைத் தீர்மானித்தல்<br><br>(ஆ) மின்செலுத்துகை மின்கட்டணவீதம் மற்றும் அத்தகைய மின்கட்டணவீதங்கள் மீது மறு தாக்கல் செய்யப்படும் மனுக்கள்.<br><br>(இ) மின்சக்தி வாங்கும் அல்லது கொள்முதல் செய்முறைக்கான ஒப்புதலுக்கான மனுக்கள் / விண்ணப்பங்கள்<br><br>(ஈ) அட்டவணையில் காணப்படும் பல்வகைகள் |

| அட்டவணை | | அட்டவணை | |
|---|---|---|---|
| x x x x | | x x x x | |
| **2.** x x x x | | 2A 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மின்உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மாநிலத்திற்குள் மின்செலுத்துதலில் ஈடுப்பட்டுள்ள உரிமதாரர்களிடமிருந்து மாநில மின்சுமை பகுப்பு மையத்தால் வசூலிக்கக்கூடிய கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்கான ஒப்புதல் | முந்திய ஆண்டின் தொடர்புடைய வரவினத்தில் 0.02 விழுக்காடு |
| **3.** மேலே 1 மற்றும் 2 எண்களில் கூறப்பட்ட மின்கட்டண ஆணையின் மறு ஆய்வினை— | | **3.** மேலே 1 மற்றும் 2 மற்றும் 2A எண்களில் கூறப்பட்ட மின்கட்டண ஆணையின் மறு ஆய்வினை— | |

| | | | |
|---|---|---|---|
| (அ) முதலில் மனு செய்த மின்கட்டண மனுதாரர்களினாலேயே முறையீடு செய்யப்படும்போது | அசல் மனு தாக்கல் செய்யும்போது செலுத்தியுள்ள கட்டணத்தில் 5 விழுக்காடு | (அ) முதலில் மனு செய்த மின்கட்டண மனுதாரர்களினாலேயே முறையீடு செய்யப்படும்போது | அசல் மனு தாக்கல் செய்யும்போது செலுத்தியுள்ள கட்டணத்தில் 5 விழுக்காடு |
| (ஆ) 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் (சட்டம் 1/1956) இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கழகம் / குழு / அமைப்பு அல்லது ஏதாவது நிறுவனம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பினால் முறையீடு செய்யப்படும்போது | ரூ.15000 | (ஆ) 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் (சட்டம் 1/1956) இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கழகம் / குழு / அமைப்பு அல்லது ஏதாவது நிறுவனம் அல்லது பிற கூட்டாண்மை அமைப்பினால் முறையீடு செய்யப்படும்போது | ரூ.15000 |
| (இ) ஒரு தனிப்பட்ட நுகர்வோரால் முறையீடு செய்யப்படுகிற போது | ரூ.1000 | (இ) ஒரு தனிப்பட்ட நுகர்வோரால் முறையீடு செய்யப்படுகிற போது | ரூ. 1000 |

(தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 008,
2018 பிப்ரவரி 13.

**சு. சின்னராஜலு ,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU